# அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

# பகவி வெற்றிடம்

## பணிப்பாளர் நாயகம் (01)

## (இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் – SLIDA)

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் (SLIDA) மேற்படியான பதவிக்காக தகைமையுடைய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**<u>தகைமைகள் மற்றும் திறன்கள்</u>**

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்குரிய பட்டப்பின் பட்டத்துடன் இலங்கை நிர்வாக சேவையின் அலுவலராக இருத்தல் மற்றும் நிறைவேற்று / முகாமைத்துவப் பதவிகளில் 20 வருடங்களைக் கொண்ட சேவைக் காலத்தினை பூர்த்திசெய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது,

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்கு உரித்தான வகையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

மற்றும்,

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ நிறைவேற்று மட்டத்துடைய அலுவலராக 20 வருடங்களைக் கொண்ட அனுபவம் மற்றும் அதில் மூன்று (03) வருடங்கள் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியிருத்தல்.

அல்லது,

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்கு உரித்தாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பட்டத்துடன் அரசாங்க அல்லது நியதிச் சட்ட சபையொன்றின் அல்லது நிறைவேற்று / முகாமைத்துவப் பதவிகளில் **20** வருடங்களைக் கொண்ட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் **( HM 2-1)** அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
- 35 வயதுக்கு குறையாத 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் மற்றும் அரச சேவையில் அதிகபட்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- சகல தரவுகளையும் உள்ளடக்கிய தனிப்பட்ட தகவல் பத்திரத்துடன் விண்ணப்பத்தை 2019 மே மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, செயலாளர், அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “ இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகப் பதவி” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**ஜே.ஜே ரத்னசிரி**
**செயலாளர்**
**அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு**